ISSN 2454-3993

■ மலர் 3 ■ சிறப்பிதழ் 1 ■ திசம்பர், 2018

# சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

SHANLAX #SINCE1990




பதிப்பாசிரியர்கள்

முனைவர் ஆ. பாப்பி கமலா பாய்

முனைவர் சு. குமரன்

முனைவர் க. லதா

திருமதி க. ரேவதி

முனைவர் ஆ. தேவ் மாலா




JOURNAL WITH 3.085 IMPACT FACTOR SIJ TAMIL STUDIES








தொகுதி - 2


பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)

தமிழ் உயராய்வு மையம், மதுரை–18

மலாயாப் பல்கலைக்கழகம்

இந்திய ஆய்வியல் துறை

சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்


இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்








# தற்காலத் தமிழ் இலக்கியங்களின் நோக்கும் போக்கும்


UGC Approved Journal Number: 40729 | VOLUME 3 | SPECIAL ISSUE 1 | DECEMBER 2018

Shanlax International Journal of Tamil Studies

A Peer-reviewed- Refereed Scholarly Quarterly Journal Globally Indexed with Impact Factor



ISSN INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE

PKP PUBLIC KNOWLEDGE PROJECT

OJS OPEN JOURNAL SYSTEMS

SHANLAX INTERNATIONAL JOURNALS

editorsij@shanlaxjournals.in | www.shanlaxjournals.in

Scanned by CamScanner

34 சூல் வெளிப்படுத்தும் வேளாண் மக்கள் வாழ்வியல் 104
**கி. சரவணபுஸ்பம்**

35 தேடல் நாவலில் மனித மனப்பாகுபாடுகள் 107
**லெ. சாமுண்டீஸ்வரி**

36 இரா. நடராசன் சிறுகதைகளில் கடைநிலை மனிதர்கள் 110
**சித்ரா தேவி**

37 பாலகுமாரன் நாவல்களில் அறச்சிந்தனைகள் 113
**க. சிவசங்கரி**

38 மா. நயினாரின் "நேர்கோடுகள்" சிறுகதைத் தொகுப்பில் சமூகச் சிந்தனைகள் 115
**கா. சுடர் ஆனந்த்**

39 கீதாரி புதினத்தின் நோக்கும் போக்கும் 118
**கோ. சுந்தரராஜன்**

40 தோகையெல்லாம் துப்பாக்கிகள் உணர்த்தும் சமூகச் சிந்தனைகள் 120
**மு. சுபாஷினி**

41 அஞ்ஞாடி புதினத்தில் நாடார் இனக்குழு போராட்டங்கள் 124
**ஜெ. சுஜாதா**

42 மானாவாரி மனிதர்கள் புதினத்தில் மொழி நடை 126
**முனைவர் ஜோ. சூசை ஜெஸிந்தா மெர்சி**

43 நாஞ்சில் நாடன் புதினங்களில் பன்முகப் பார்வை 129
**பெ. செல்வராணி**

44 'நிகழ்தகவு' சிறுகதைகளில் சமூகம் 131
**முனைவர் சி. சொர்ணமாலா**

45 குறும்பனை சி. பெர்லின் சிறுகதைகளில் நெய்தல்நில மக்களின் பண்பாட்டுக் கூறுகள் 134
**ஜா. டெரன்ஸி**

46 கி. ராஜநாராயணன் கதைகளில் பரிமாறும் உணவுகள் & உணர்வுகள் 137
**அ. டெல்பின்**

47 அகிலனின் "பால்மரக் காட்டினிலே" நாவல் – ஒரு பார்வை 140
**முனைவர் த. தனலெட்சுமி & மு. கார்த்திகா**

48 எம்.ஏ.சுசிலாவின் மீட்டுருவாக்கச் சிறுகதைகளில் பெண்ணியம் 143
**ம. தாட்சாயினி**

49 குறிஞ்சித்தேன் புதினத்தில் காணும் பண்பாட்டு மரபுகள் 146
**முனைவர் இரா. திலகா**

50 மகாகவி பாரதியார் புனைகதைகளில் குறியீடாகும் மீயியற்கை கூறுகள் 149
**பி. திவ்யா**

Scanned by CamScanner

# இரா. நடராசன் சிறுகதைகளில் கடைநிலை மனிதர்கள்

**சித்ரா தேவி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, பாத்திமா கல்லூரி, மதுரை

**முன்னுரை**

'ஆயிஷா நடராசன்' என்ற இரா.நடராசன்' -2014-ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதமி விருது பெற்ற சிறுவர் இலக்கிய எழுத்தாளர். இவர் எழுதிய 'ஆயிஷா' எனும் சிறுகதை ஏற்படுத்திய தாக்கத்தால் இவர் 'ஆயிஷா நடராசன்' என்ற பெயரால் அழைக்கப்படுகிறார். இந்த 'ஆயிஷா' சிறுகதை இவருடைய 'இரா.நடராசன் சிறுகதைகள்' என்ற தொகுப்பிலும் தனி நூலாகவும் கிடைக்கிறது.

இயற்பியல், கல்வியியல் மேலாண்மை, உளவியல் ஆகிய துறைகளில் முதுகலைப்பட்டம் பெற்றவர். கடலூரில் கிருஷ்ணசாமி நினைவு மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராக இரா. நடராசன் பணியாற்றியவர். கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக தொடர்ந்து புத்தகங்களுக்காகவே தன் உழைப்பைக் கொடுத்தவர். 'புத்தகம் பேசுது' என்ற மாத இதழின் ஆசிரியர்.

இவரின் சிறுகதைகள் உலகளாவிய வாசகர் கவனத்தை ஈர்த்தவை. தமிழ் மொழியில் எழுதப்பட்ட இக்கதைகளில் சில தெலுங்கு, மலையாளம், இந்தி, ஆங்கிலம், பிரஞ்சு உட்பட பல மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. உலகச்சிறுகதைத் தொகுதிகள் சிலவற்றில் இவரின் சில கதைகள் இடம் பெற்றுள்ளன. இவைகளுள் நான்கு கதைகள் குறும்படங்களாக எடுக்கப்பட்டு பன்னாட்டுப் படவிழாக்களில் விருதுகளைப் பெற்றுள்ளன.

பால சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டுள்ளது. இந்த விருது இருபத்து மூன்று மொழிகளுக்கும் வழங்கப்படும். 'கணிதத்தின் கதை' எனும் நூலுக்குத் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை விருது வழங்கப்பட்டது. பள்ளிக்கூடச் சிறுமியின் துயரக்கதையை 'ஆயிஷா' எனும் குறுநாவல் தமிழில் ஒரு இலட்சம் பிரதிகள் விற்பனையாகிச் சாதனை படைத்தது.

இப்படி சிறுகதை உலகில் பல சாதனைகளைப் புரிந்த இவரின் பால்திரிபு, ரத்தத்தின் வண்ணத்தில், சுசீ முதல் சுசீ வரை நாத்திகன் மனைவி என்ற சிறுகதைகள் சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களின் மனக்குமுறலை நம் கண்முன்னே படம்பிடித்துக்காட்டுகின்றன. ஓர் ஆண் பெண்ணாகவோ அல்லது ஓர் பெண் ஆணாகவோ மாறினால், இந்தச் சமூகம் அவர்களை நிராகரிக்கின்றது. நிராகரிப்பது மட்டுமல்லாமல் அவர்களை மனரீதியாகவும், உடல்ரீதியாகவும் பல வகைகளில் துன்புறுத்துகின்றது என்பதைப் 'பால்வீதி' சுட்டிக்காட்டுகிறது.

**திருநங்கையர் நிலை**

'திருநங்கையர்' என்ற பெயரை வைத்து இந்த சமூகம் அவர்களை புரியாத புதிராகவே உள்ளது. படைத்தவன் செய்த பிழைக்காக, அவர்கள் தண்டனை ஏற்பது கொடுமையிலும் கொடுமை.

தங்களுக்கும் குடும்பம் வேண்டும். தாய், தந்தை, அக்கா, அண்ணன், தம்பி என்ற அனைத்து உறவுகளும் வேண்டும் என்ற அந்தச் சகோதர, சகோதரிகள் கதறுவது, சமூகத்தின் காதில் விழவில்லை. தனது குடும்பத்தை இழந்து, தனது உறவுகளை இழந்து, ஒவ்வொரு நாளும் போராடிக்கொண்டிருக்கும் அந்த பாவப்பட்ட மனிதர்கள் குறித்த சகமனிதர்களிடம் இல்லாமல் போனது பெற்ற தந்தையையும், தாயையும், தனது உறவுகளையும் நிரந்தரமாக இழந்து, சமூகத்தில் கடைக்கோடி மனிதர்களாகக் கூட இல்லாமல், கேலி, கிண்டல் பேச்சுக்களையும், ஏளனப் பார்வைகளையும் தாங்கிக் கொண்டு, அவர்கள் இந்த உலகில் வாழ்கிறார்கள் என்றால், அவர்களைவிட உயர்வானவர்கள் இவ்வுலகில் இல்லை என்றுதான் கூறவேண்டும்.

உடல்ரீதியாகத்தான் மாறுகிறார்களே தவிர, அவர்கள் மனரீதியாக எந்த மாற்றத்தையும் உணரவில்லை. தனது பெற்றோர்மீதும், உறவுகள் மீதும் அதே அன்புடனும், அதே பாசத்துடனும் அந்த ஜீவன்கள் உள்ளனர். என்றாவது ஒருநாள், தனது தாய், தந்தை, தனது உறவினர்கள் தங்களை வந்து அழைப்பார்கள் அவர்களுடன் சென்று விடலாம் என்று அன்புக்காகவும், பாசத்திற்காகவும் ஏங்குகின்றனர் என்பதை இரா. நடராஜன் தன் சிறுகதையை பதிவு செய்துள்ளார்.

தனது உணர்வுகளையும், உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்திக்கொண்டு, தனக்கு என்று யாருமற்ற ஒரு தனி உலகத்தை உருவாக்கிக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கும் அந்த மனிதர்கள் உயிரற்ற